# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# இரண்டாம் பத்து

## ஒன்பதாம் திருமொழி - சொல்லு
## திருப்பரமேச்சுரவிண்ணகரம்

** சொல்லு வன்சொற்பொருள் தான் அவையாய்ச் *
சுவை ஊறொலி நாற்றமும் தோற்றமுமாய் *
நல் அரன் நாரணன் நான்முகனுக்கு * இடம் தான்
தடம் சூழ்ந்து அழகாய கச்சி **
பல்லவன் வில்லவன் என்று உலகில் * பலராய்ப்
பல வேந்தர் வணங்கு கழல்
பல்லவன் * மல்லையர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 1

கார் மன்னு நீள் விசும்பும் * கடலும் சுடரும்
நிலனும் மலையும் * தன் உந்தித்
தார் மன்னு தாமரைக் கண்ணன் இடம் * தட மாமதிள்
சூழ்ந்து அழகாய கச்சி **
தேர் மன்னு தென்னவனை முனையில் செரு வில் *
திறல் வாட்டிய திண் சிலையோன் *
பார் மன்னு பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 2

** உரந்தரு மெல்லணைப் பள்ளி கொண்டான் *
ஒரு கால் முன்னம் மா உருவாய்க் கடலுள் *
வரந்தரு மாமணிவண்ணன் இடம் * மணி மாடங்கள்
சூழ்ந்து அழகாய கச்சி **
நிரந்தவர் மண்ணையில் புண் நுகர் வேல் *
நெடு வாயில் உகச் செருவில் முன நாள் *
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 3

அண்டமும் எண்திசையும் நிலனும் *
அலை நீரொடு வான் எரி கால் முதலா *
உண்டவன் எந்தை பிரானது இடம் * ஒளி மாடங்கள்
சூழ்ந்து அழகாய கச்சி **
விண்டவர் இண்டைக் குழாமுடனே * விரைந்தார்
இரியச் செருவில் முனிந்து *
பண்டொரு கால் வளைத்தான் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 4

தூம்புடைத் திண்கை வன்தாள் களிற்றின் * துயர்
தீர்த்து அரவம் வெருவ * முன நாள்
பூம்புனல் பொய்கை புக்கான் அவனுக்கு * இடம் தான்
தடம் சூழ்ந்து அழகாய கச்சி **
தேம்பொழில் குன்றெயில் தென்னவனைத் * திசைப்பச்
செரு மேல் வியந்து அன்று சென்ற *
பாம்புடைப் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 5

திண்படைக் கோள் அரியின் உருவாய்த் * திறலோன்
அகலம் செருவில் முன நாள் *
புண் படப் போழ்ந்த பிரானது இடம் * பொரு மாடங்கள்
சூழ்ந்து அழகாய கச்சி **
வெண்குடை நீழல் செங்கோல் நடப்ப * விடை வெல்கொடி
வேற்படை முன் உயர்த்த *
பண்புடைப் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 6

இலகிய நீள்முடி மாவலி தன் பெரு வேள்வியில் *
மாண் உருவாய் முன நாள் *
சலமொடு மாநிலம் கொண்டவனுக்கு * இடம் தான்
தடம் சூழ்ந்து அழகாய கச்சி **
உலகுடை மன்னவன் தென்னவனைக் * கன்னி
மாமதிள் சூழ் கருவூர் வெருவ *
பல படை சாய வென்றான் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 7

குடைத் திறல் மன்னவனாய் ஒரு கால் *
குரங்கைப் படையா * மலையால் கடலை
அடைத்தவன் எந்தை பிரானது இடம் * அணி மாடங்கள்
சூழ்ந்து அழகாய கச்சி **
விடைத் திறல் வில்லவன் நென்மெலியில் * வெருவச்
செரு வேல் வலங்கைப் பிடித்த *
படைத் திறல் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 8

பிறை உடை வாணுதல் பின்னை திறத்து *
முன்னே ஒரு கால் செருவில் உருமின் *
மறை உடை மால்விடை ஏழ் அடர்த்தாற்கு * இடம் தான்
தடம் சூழ்ந்து அழகாய கச்சி **
கறை உடை வாள் மற மன்னர் கெடக் *
கடல் போல் முழங்கும் குரல் கடுவாய் *
பறை உடைப் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 9

** பார் மன்னு தொல்புகழ்ப் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகர் மேல் *
கார் மன்னு நீள் வயல் மங்கையர் தம் தலைவன் *
கலிகன்றி குன்றாது உரைத்த **
சீர் மன்னு செந்தமிழ் மாலை வல்லார் *
திருமாமகள் தன் அருளால் * உலகில்
தேர் மன்னராய் ஒலி மாகடல் சூழ் *
செழுநீர் உலகாண்டு திகழ்வர்களே 10

**அடிவரவு:** சொல்லு கார் உரம் அண்டமும் தூம்பு திண் இலகிய குடை பிறை பார் மஞ்சாடு

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---